குழித்துறை நகர்மன்றத்தின் 28-08-2023 **திங்கள் கிழமை** மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை நகராட்சி மேல்நிலை குடிநீர் தொட்டிகள் இருக்கும் பம்மம், ஞாறான்விளை பந்நியணி, கழுவன்திட்டை போன்ற பகுதிகளில் புதிய குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ள இடையூறாக இருந்து அகற்றப்பட்ட மரங்களுக்கு பதிலாக புதிய மரகன்றுகள் நட்டு சுற்று சூழலை மேம்படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.582 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) வார்டு எண்.9-ல் அமைந்திருக்கும் நூலகத்தை புதுப்பிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.582 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) வார்டு எண்.9-ல் செயல்படும் சந்தையை நவீன படுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.582 (3) தீர்மானிக்கப்பட்டது.

9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்

1) விளவங்கோடு சாலையில் மாடன்கோவில் அருகாமையிலிருந்து திரு. தாமஸ் அவர்கள் வீட்டின் அருகாமை வரை மழைநீர் வடிகால் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.583 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை விளவங்கோடு மாலை சந்தை வளாகத்தில் அலங்கார கற்கள் பதித்து சிறுவர்கள் விளையாட ஊஞ்சல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.583 (2) தீர்மானிக்கப்பட்டது.

3) விளவங்கோடு சொக்காலத்தெரு சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் சாலையை புதுப்பிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.583 (3) தீர்மானிக்கப்பட்டது.

14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. . லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்

1) ஆனிபானு மண்டபத்திலிருந்து கிறிஸ்துராஜா ஆலயம் வரை உள்ள ஓடையை சரி செய்ய மூடி போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.584 (1) தீர்மானிக்கப்பட்டது.

2) எம்.எஸ்.ஸி. தொடக்கபள்ளியிலிருந்து குருசடி வரை கேமரா வைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.584 (2) தீர்மானிக்கப்பட்டது.

21-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கே. செல்வகுமாரி. கொண்டு வரும் தீர்மானம்

1) பம்மம் சானல் ரோட்டில் காங்கிரீட் தளம் புதுகுடிநீர் இணைப்பு பதிக்கப்பட்டுள்ளதால் பழுதடைந்து உள்ளது. ஆகையால் காங்கிரீட் தளம் போட மன்ற தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.585 (1) தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவைப்படும் எழுதுபொருட்கள் Tonner (டோனர்) A4. Paper போன்ற பொருட்கள் கொள்முதல் செய்யவும், மேற்படி பொருட்கள் கூட்டுறவு அச்சகம் மூலம் கொள்முதல் செய்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5 இலட்சம் நகராட்சி பொது நிதியில் இருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.180/2007/டி2.

மன்றத்தீர்மான எண்.586 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சி எல்லையில் பாதாள சாக்கடை வசதி இல்லாததால் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்து கொண்டு செல்லவும் அப்புறப்படுத்தவும் தொடர்பாக கழிவுநீர் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் வாகனங்களின் பதிவு சான்றிதழில் கழிவுநீர் டேங்கர் என வாகன வகை பதிவு செய்யப்பட வேண்டும். மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 86-ன்கீழ் கழிவுநீர் வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகனம் பதிவு சான்றிதழில் கழிவுநீர் டேங்கர் எனப் பதிவு செய்து 15 நாட்களுக்குள் அந்தந்த வட்டார போக்குவரத்து அதிகாரிகளை

அணுகி சரியான உடற்தகுதி சான்றிதழுடன் அனுமதி பெறவும் என்ற விளம்பரத்தை 05-06-2023-ம் தேதி மதுரை மணி தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மதுரை மணி - ரூ.12,696/-

மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்**.3767/2022/H1.

மன்றத்தீர்மான எண்.587 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.3</u>

குழித்துறை நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கு அதிகமாக அளவுள்ள திடக்கழிவுகள் உருவாகக் கூடிய கட்டிடங்கள் மத்திய அரசுத் துறை நிறுவனங்கள், மாநில அரசு துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மருத்துவ சிகிச்சை நிலையங்கள், பள்ளி, கல்லூரி நிறுவனங்கள், மாணவர் விடுதிகள், ஷாப்பிங் மால்கள், வழிபாட்டு தலங்கள், விளையாட்டு அரஙகுகள், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சந்தை ஒப்பந்தம் எடுத்தோர் ஆகியோர் அதிக கழிவுகளை உருவாக்குபவர்கள் ஆவர்கள். குடியிருப்புகள் வணிக பகுதிகள் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் 100 கிலோவிற்கு அதிகமாக கழிவுகளை உருவாக்குபவர்களை நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று பதிவு செய்து தங்கள் வளாகத்திற்குள் உருவாகும் கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்கு ஏற்ப உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விளம்பரத்தினை 08-06-2023-ம் தேதி மக்கள் குரல் தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் குரல் - ரூ.18,144/-

மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்**.3767/2022/H1.

மன்றத்தீர்மான எண்.588 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள பொதுகழிப்பிடம் ODF + சான்று ஆய்விற்கு SBM குழுவில் இருந்து வரவுள்ளதால் பொதுகழிப்பிடங்களில் உள்ள பராமரிப்பு பணிகள் செய்ய சுகாதார ஆய்வாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதன் அடிப்படையில் குழித்துறை நகராட்சியில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பெருந்தெரு ஆர்.சி.வீதியில் உள்ள கழிப்பிடத்திற்கு வர்ணம் பூசுதல், Tiles பதித்தல் மற்றும் மின்விளக்குகள் பொருத்துதல் ஆகிய பணிகளும் மற்ற பொதுக்கழிப்பிடங்களுக்கு Incinerator பொருத்தும் பணி மற்றும் பஸ்நிலையம் நம்ம டாய்லெட் ஆண்களுக்கான Closet பொருத்தும்பணி மற்றும் கண்ணாடி பொருத்துதல், LED விளக்குகள் பொருத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. உத்தேச மதிப்பீடு ரூ.3,50,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- 1) மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**2111/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.589 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 இடைவிளாகம் நடைப்பாதை பழுதடைந்து பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட பாதையை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,00,000/-க்கு மன்றம் தனது தீர்மானம் எண்.414, நாள் 09-02-2023-ல் அனுமதியளித்துள்ளதால் மேற்படி பணிக்கு 18-07-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விவரம் கீழ்வருமாறு.

1) திரு.D. பிரேம்குமார் - மதிப்பீட்டு விலைவிகிதம்
2) திரு. பாலகிருஷ்ணன் - 0.11% மதிப்பீட்டை விட அதிகம்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.D. பிரேம்குமார் என்பவர் மதிப்பீட்டு விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**ந.க.எண்.**31/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.590 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.6

குழித்துறை நகராட்சி வார்டு எண்.7 கழுவன்திட்டை சாலையில் உள்ள நீதிமன்றம் முகப்பு வாயில் முன்பாக அமைந்துள்ள சிறுபாலம் சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,40,000/- தயார் செய்யப்பட்டுள்ளது. மன்ற தீர்மானம் எண்.579, நாள் 31-07-2023 அன்று ஒப்புதல் அளித்துள்ளதால் 18-04-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.V. பாலகிருஷ்ணன் | 0.16% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.S. பாபு | 0.26% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.16% குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.V. பாலகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2078/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.591 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.7

குழித்துறை நகராட்சி வார்டு எண்.2 உண்டனக்குடி பகுதிக்கு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் அருகில் உள்ள பெருங்குளத்தில் இருந்து மின்மோட்டார் பொருத்த Sintex Tank அமைத்து பணி மேற்கொள்ள உத்தேச செலவினமாக ரூ.2,60,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்ற தீர்மானம் எண்.546, நாள் 30-06-2023 அன்று ஒப்புதல் அளித்து 04-08-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.15% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.15% திரு.P. ஜெயபிரகாஷ் என்ற ஒப்பந்ததாரர் கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1677/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.592 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் (மார்த்தாண்டம் பகுதிகள்) குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய்கள் (Pumping Main) நீர்தேக்க தொட்டிகளுக்கு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பிரதான குழாய்கள் மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது. பிரதான குழாய்கள் மற்றும் வினியோக குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வினியோகமானது பொதுமக்களுக்கு தடையின்றி வழங்கிடவும் குடிநீர் வினியோக வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.6.00 (ஆறு இலட்சம்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:-1) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.2038/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.593 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதிகளில் (குழித்துறை பகுதி) குடிநீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் வினியோகம் செய்யப்படும் பிரதான குழாய் நீர்தேக்க தொட்டிகளுக்கு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பிரதான குழாய்கள் மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்கள், வினியோக குழாய்கள் மற்றும் பொது குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வினியோகமானது பொதுமக்களுக்கு தடையின்றி வழங்கிடவும் குடிநீர் வினியோக வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.6.00 மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:-1) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

2) மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ந.க.எண்.2039/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.594 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் பனைவிளை முதல் பிலாமன்விளை வரை உள்ள நடைபாதை மிகவும் பழுதடைந்து உள்ளது. மேற்கண்ட சாலையினை சிமெண்ட் காங்கிரீட் பாதையாக சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,70,000/-க்கு மன்ற அனுமதி 09-02-2023 அன்று பெறப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண்.415-ன்படி 04-08-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | 0.10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.04% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.04% திரு.P. ஜெயபிரகாஷ் குறைவாக கொடுத்துள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.314/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.595 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14-ல் உள்ள காமனாட்டுவிளை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான பொதுக்கிணறு ஒன்று உள்ளது. பொதுமக்கள் நலன்கருதி இக்கிணற்றை தூர்வாரி சுத்தம் செய்ய ரூ.70,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண்.549, நாள் 30-06-2023-ன்படி அனுமதி பெற்று 04-08-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.A. ஆன்றணி | 1.35% மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | திரு.V. பாலகிருஷ்ணன் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.V. பாலகிருஷ்ணன் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1658/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.596 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடம் ODF+ சான்று ஆய்விற்கு SBM குழுவில் இருந்து வரவுள்ளதால் பொதுகழிப்பிடங்களில் உள்ள பராமரிப்பு பணிகள் செய்ய ரூ.3,50,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி 19-07-2023 பெறப்பட்டு 04-08-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.A. ஆன்றணி | 2.14% மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | திரு.V. பாலகிருஷ்ணன் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.V. பாலகிருஷ்ணன் என்பவர் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ளார். எனவே மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கிட மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2111/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.597 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சி அலுவலகத்தில் 15 KVA-1, 30 KVA -1 ஜெனரேட்டர்கள் மின்தடையின் போது பயன்படுத்துவதற்கு செயல்பாட்டில் உள்ளன. அவற்றில் ஏற்படும் பழுதுகளை சரிபார்க்கவும் அவ்வப்போது ஜெனரேட்டர்களை சர்வீஸ் செய்வதற்கும் வருடத்திற்கு உத்தேச செலவினமாக ரூ.1,22,000/-த்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தீர்மானம் எண்.556, நாள் 30-06-2023-ன்படி அனுமதி பெற்று 04-08-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | அன்னை ஜெனரேட்டர் ஸ்டேர் சர்வீஸ் | 4.97% மதிப்பீட்டை விட கூடுதல் |
| 2 | திரு.R.J. Power | 1.51% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 1.51% திரு.R.J. Power என்ற ஒப்பந்ததாரர் கொடுத்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.1678/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.598 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.8 இடைகுளம் முதல் கல்லுகெட்டி -2 சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ளது. மேற்கண்ட சாலையை பொதுமக்கள் நலன் கருதி சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,30,000/- (நான்கு இலட்சத்து முப்பதாயிரம்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2060/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.599 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

நகராட்சி மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 16-08-2023 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்ட அறிவுரையின் படி குழித்துறை நகராட்சியில் தெருநாய்களின் தொலலைகளை கட்டுபடுத்தும் வண்ணம் குழித்துறை நகராட்சியில் விலங்குகள் இனப்பெருக்க கட்டுபாட்டு மையம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் குழித்துறை நகராட்சி உரக்கிடங்கு இடம் தேர்வு செய்யப்பட்டு புதியதாக விலங்குகள் இனப்பெருக்க கட்டுபாட்டு மையம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.18.00 இலட்சம் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணி பொதுநிதியில் மேற்கொள்ளவும், தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2061/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.600 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.3-ல் வெட்டுகாட்டுவிளை முதல் படப்பறை-2 வரையுள்ள சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட சாலையை கான்கிரீட் சாலையாக அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.7,00,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2059/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.601 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.17</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.5-ல் ஆர்.சி.தெரு மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே மேற்கண்ட தெருவை கான்கிரீட் தளமாக அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.3,60,000/- (மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2064/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.602 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.18</u>

குழித்துறை நகராட்சியில் வார்டு எண்.5-ல் ஆர்.சி.தெரு முதல் ஏசுதாஸ் காலணி தெரு மிகவும் பழுதடைந்துள்ளது. அங்குள்ள குடியிருப்பு மக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அத்தெருவை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2,80,000/- (இரண்டு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2063/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.603 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.19</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு கீழ்கண்டுள்ள வியூகப்படி பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கி உத்தேச மதிப்பீடு ரூ.1,00,000/- அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனத்தில் கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) கம்பூட் - 35
2) ஒளிரும் சட்டை - 70
3) கையுறை சிறியது - 70
4) கையுறை பெரியது - 70
5) முககவசம் - 1000
6) தொப்பி - 70

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2062/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.604 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.20

குழித்துறை நகராட்சி வார்டு எண்.11-ல் கண்ணக்கோடு பகுதியில் கண்ணக்கோடு சாலையிலிருந்து செங்கோட்டுவிளை செல்லும் நடைபாதை மண்பாதையாக உள்ளது. அப்பாதை தனியாருக்கு சொந்தமானது பத்திரபதிவு எண்.1.2022-ல் தமிழக ஆளுநர் பெயரில் நகராட்சி ஆணையாளர் குழித்துறை மூலமாக பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பாதை மண்பாதையாக உள்ளதால் பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பாதையை கான்கிரீட் பாதையாக அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4,70,000/- தயாரிக்கப்பட்டுள்ளது.தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**ந.க.எண்**.2065/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.605 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.21

குழித்துறை நகராட்சி வார்டு எண்.21-ல் சானல் சிறியகாட்டுவிளை சாலை-2-ல் உள்ள மழைநீர் வடிகால் பழுதடைந்து கழிவுநீர் சாலையில் செல்கிறது. அதனால் அப்பகுதி குடியிருப்பு மக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட மழைநீர் வடிகாலை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.2,60,000/- (இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டை பொது நிதியின் கீழ் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**ந.க.எண்**.2062/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.606 அனுமதிக்கப்பட்டது.

.